ஓம் கணபதி துணை

# கிரஹப்பிரவேச முன்தயாரிப்பு

(அனைத்து பக்கங்களையும் அச்சிடவும்)

இந்த முன்னேற்பாடு விளக்கம் கிரஹப்பிரவேசம் மற்றும் கணபதி, லக்ஷ்மி, குபேர, நவக்கிரக, வாஸ்து வேள்வி(ஹோமங்)களுக்கும் பொதுவானது. கிரஹப்பிரவேசம் சம்பிரதாயப்படி, தர்மத்தின் அடிப்படையில் மிகவும் புனித தன்மையுடன் தரமாக அமைய வேண்டும் என்கிற நல்ல எண்ணத்தில் திட்டமிடல், ஒருங்கிணைப்பது மற்றும் செயல்படுவது குறித்து இங்கு விரிவாக தரப்பட்டுள்ளது. முழுஈடுபாட்டுடன் தங்களின் ஒத்துழைப்புடன் நாம் கூடி இறையருளால் கிரஹப்பிரவேச நிகழ்ச்சியை வெற்றியடைய செய்வோம்

## புனிதப்படுத்துதல்



✱ பூஜை துவங்கும் நேரத்திற்கு 4மணி நேரம் முன்னதாக இடத்தை சுத்தம் செய்யவும்
✱ தலை வாசற்படிக்கு மாவிலை தோரணம் கட்டி. மஞ்சள் குங்குமம் இடவும்
✱ வாசல்படி மாலை சாற்றவும், ✱ வாசல், உட்புறம், பூஜையறையில் 8 இதழ் தாமரை கோலம் போடவும்
✱ பூஜை செய்யும் இடம் ஈரம் இல்லாமல் இருக்க வேண்டும்

***தேவையான பொருட்கள்:*** மாயிலை கொத்து, சணல் கயிறு, சுத்தியல், கம்பி ஆணி 4,சணல் கோணி 5, மிதியடி 2.

## கோ பூஜை

✱ பசுவும் கன்றும் கிடைக்காத நிலையில் **வெள்ளியில் ஆன பசு கன்று** அல்லது கோமாதா படத்துடன் பிரவேசிக்கவும்
✱ பசுவை வீட்டினுள் அழைத்து வருபவர் குளித்து, திருமண் / விபூதி இட்டு வேஷ்டி துண்டு கட்டியிருக்க வலியுறுத்தவும்
✱ பசுவும் கன்றும் பூஜைக்கு 2 மணி நேரம் முன்னதாக தேவை
✱ பசுவிற்கு புது வெள்ளை வேஷ்டி 4 முழம், கன்றுவிற்கு துண்டு
✱ கோதுமை தவிடு 3 கிலோ, அரிசி1/2 கிலோ, வெல்லம்1/2 கிலோ, வாழைப்பழம் 6



## பஞ்சகவ்யம்

✱ பசும் பால் 2 லிட்டர் (பால் காய்ச்ச உட்பட) ✱ பசும் தயிர் 100 மிலி
✱ பசுவின் கோமயம் , சாணம், விரட்டி கிடைப்பின் கொண்டுவரவும் (கடையில் விற்கும் கோமயம் வாங்கவேண்டாம்)

## பூஜைப்பொருட்கள்



✱ பட்டியலில் உள்ள அனைத்து பொருட்களும் தேவை
✱ பட்டியலையும் வாங்கிய பொருட்களையும் ஒப்பிட்டு சரி பார்க்கவும்
✱ தேங்காய் அளவு கலசத்தின் வாய்க்கு ஏற்ப சிறியதாக இருக்கவேண்டும்
✱ பூஜைப்பொருட்களை 2 மணி நேரம் முன்னதாக பூஜை இடத்தில் சேர்ப்பிக்கவும்
✱ சாணம் அல்லது மஞ்சள் பூசிய செங்கல் 13, மணல் 1 பாண்டு

## பால் காய்ச்சுதல்

✱ புதிய அடுப்பை கழுவி மஞ்சள் குங்குமம் இடவும், மணல் நிரப்பி அதன் மேல் அடுப்பை வைக்கவும்
✱ 2 கிலோ விறகு சுள்ளி தேவை (சில சூழலில் எரிவாயு அடுப்பு, மின் காந்த அடுப்பும் பயன் படுத்தலாம்)
✱ பால் காய்ச்ச புதிய பால் பாத்திரம் அளவுடன் வாங்கவும்.
✱ முதன் முறையாக மட்டும் புதிய மண் அடுப்பு கொண்டு பால் காய்ச்சுதல் நன்று
✱ மஞ்சள் கயிற்றில் மஞ்சள்கொம்பு கட்டி பாத்திரத்தில் கட்டவும்
✱ பால் பொங்கியவுடன் அதில் சர்க்கரை, ஏலம், குங்குமப்பூ போட்டு படைக்கவும்
✱ ஹோம குண்டத்திலுருந்து நெருப்பு எடுக்க இடிக்கி தேவை
✱ பால் காய்ச்சியவுடன் அதே நெருப்பில் சர்க்கரை பொங்கல் செய்தல் நன்று.
✱ சர்க்கரை பொங்கல் செய்ய வெல்லம், புது அரிசி, முந்திரி, திராட்சை, பருப்பு



## புத்தகம்

புதுமனை புகுவிழா அன்று விநாயகர் அகவல், தேவாரம், திருவாசகம், திவ்யபிரபந்தம், சிவபுராணம்,திருப்புகழ், கந்தசஷ்டி கவசம், பகவத்கீதை, இராமாயணம், மகாபாரதம் போன்ற புத்தகங்களை நடுவீட்டில் வைத்து வழிபட்டு மாலையில் தீபம் ஏற்றியபின் படிக்கவும்

**மேற்படி புத்தகங்கள் இல்லை எனில் தவறாமல் புதியதாக வாங்கவும்.**

## சைவ - வைணவ இலச்சினை

✱ தலைவாசலில் ஓம், சங்கு சக்கரம், சிவ வடிவம் பொருத்தவும் ✱ தலைவாசல் மேல் தனலக்ஷ்மி சின்னம் நன்று

## முக்கியமானவைகள்

✱ கத்தரிக்கோல், தேங்காய் உடைக்க வெட்டு கத்தி, சமையல்கத்தி, சுத்தியல், ஆணி

## வரிசை தட்டுடன் பிரவேசம்

அருகில் உள்ள கோயில் வாசலில் இருந்து பூஜை துவங்கும் 2 மணி நேரம் முன்னதாக புறப்பட்டு புது வீட்டில் பிரவேசம் செய்யவும். வரிசை தட்டுகள் 9 (முன் நாள் இரவே தயார் படுத்தி வைக்கவும், தயார் செய்ய1 மணி நேரம் ஆகும்)

1. காமாட்சி விளக்கு[ பொட்டு பூ வைத்து ] காற்று அடித்தால் அணையாமல் இருக்க குடம்
2. புதிய விநாயகர், சரஸ்வதி, லக்ஷ்மி, படம்[பொட்டு பூ வைத்து]
3. சிறிய கப்பில் சர்க்கரை, புளி, பருப்பு 4 வகை, மிளகாய், உப்பு, அரிசி, தவிடு
4. வெற்றிலை, பாக்கு, மஞ்சள் கொம்பு, சுன்னாம்பு, பூச்சரம், வாழைப்பழம்
5. தம்பதி புதிய துணி, மாலை
6. மஞ்சள் பூசிய தேங்காய் 5
7. ஐந்து வித பழங்கள்(தலா 1)
8. மஞ்சள் தூள், குங்குமம், பன்னிர், கற்கண்டு, சந்தனம்
9. சிறிய குடத்தில் நீர்

**குறிப்பு : வரிசை எடுக்க பெண்கள் போதுமான எண்ணிக்கை இல்லாத பொழுது வரிசை எண்1, 2, 4 மட்டும் போதும்**

## வரவேற்பு மற்றும் உபசரிப்பு

✱ விருந்தினரை வரவேற்க நன்கு அறிமுக பெரியவர்கள் ஒருவரை வாசலில் நியமிக்கவும்
✱ பன்னீர் சொம்பு, சந்தனக்கிண்ணம், குங்கும சிமிழ், டைமண்ட்கற்கண்டு, ரோஜா பூ, மேஜை விரிப்பு, பூங்கொத்து
✱ வரவேற்பு இடத்தில் விளையாட்டுத்தனமான சிறார்களை நியமிக்கவேண்டாம்
✱ வரவேற்ப்பு மிகவும் கௌரவமானது, மரியாதைக்குரியது. விருந்தோம்பலில் வரவேற்ப்பு மிகவும் முக்கியமானது
✱ நிகழ்ச்சி முடியும் வரையில் வருபவர்களை முகமலர்ச்சியுடன் வணக்கம் செலுத்தி வரவேற்கவும்
✱ விருந்தினர் விடைபெறும் பொழுது தாம்பூலம் பை தந்து நன்றிகூறி வாசல்வரை வழியனுப்பவும்

## இட தூய்மை / உடல் தூய்மை

✱ பூஜை செய்யும் இடத்தில் ஈரம், எண்ணெய் துடைக்க பழைய துணி, கோணி தேவை
✱ குப்பை போட குப்பை கூடை அல்லது பிளாஸ்டிக் பை ✱ புதிய மிதியடி, பழைய செய்தித்தாள்
✱ உணவு உண்ட பின் கை கழுவிட சரியான இடத்தை தேர்வு செய்யவும், துடைக்க டவல் அல்லது டிஷ்யு பேப்பர்
✱ வருகை தருபவர்கள் பயண்படுத்தும் வகையில் கழிவறையை தயார் படுத்தவும். போதுமான அளவு நீர், வாளி, ஜக்கு

கிரஹப்பிரவேசம் அன்று குப்பைகளை, எச்சில் இலைகளை வீட்டின் முன்பகுதியில் கொட்டாமல் பிளாஸ்டிக் பைகளில் போட்டு மூடிவைத்து முறைப்படி சுகாதார பணியாளர்கள் உதவியுடன் மறுநாள் அப்புறப்படுத்தவும், இதனால் இல்லத்தின் புனிதமும், அழகும் பாதுகாக்கப்படும்.

***குறிப்பு :*** *காலையில் வருகை தரும் நீரிழிவு நோயாளிகள், பெண்கள், முதியோர்களுக்கு கழிவறை ஏற்பாடு தவறாமல் செய்யவும். கழிவறை பணி முடிந்தால் மட்டும் கிரஹப்பிரவேசத்தை ஏற்பாடு செய்யவும் கழிவறை குழாயில் நிர்வரும்* **வால்வுகளை** *திறந்து வையுங்கள்*



## அவசர கால தேவை

✱ மின் தடை ஏற்பட்டால் சமாளிக்க அவசரகால மின் விளக்கு (Emergency Light)
✱ டார்ச் லைட், எலக்டிரிக் டெஸ்டர், இன்ஸ்லேஷன் டேப், ஒரு துண்டு ஒயர்
✱ முதல் உதவி பெட்டி (பலர் கூடுவதால்) ✱ திடீர் மின் தடை நீக்க எலக்ட்ரீஷியன் தொடர்பு

## நல்ல நேரம்

✱ கிரஹப்பிரவேஸம் நேரம் (லக்னம்) எல்லா நட்களிலும் அதிகாலையில் வராது. சிலநாட்களில் பகல் பொழுதிலும் வரும்
✱ அதிகாலை பிரம்ம முகூர்த்தம் என்பது அனைத்து நாட்களிலும் சுபநாளாகவும் கிரஹப்பிரவேஸத்திற்கு உகந்தும் இருக்காது.
✱ கரிநாள் என்பது சூரிய உதயதிற்கு பின்னர் சூரிய மறைவு வரை மட்டும் கணக்காகும்.
✱ குறித்த நல்ல நேரத்தில் பூஜையை துவக்கி நிறைவு செய்ய நன்கு திட்டமிடவும் ✱ நல்ல லக்னத்தில் பால் பொங்குதல் முக்கியம்

### புகை



பூஜையின் பொழுது எதிர்பாராத விதமாக புகை அதிகமானால் சிலரின் உடல்நிலை நலன் கருதி புகையை வெளியேற்ற மேஜை மின்விசிறி தேவை (Table Fan and Extension Wire Switch Box), புகை ஒவ்வாமை உள்ளவர்கள் "மாஸ்க்" (Face Mask) வாங்கவும்

## சில்லரை காசுகள் (பூஜை துவங்கும் முன்னர் புரோகிதர் வசம் தரவும்)

✱ வெள்ளி காசு 5 கிராம் : 2 எண்ணிக்கை (வாஸ்து சாந்தி தானம்) ✱ 5 ரூபாய் காசு : 21 ✱ 1 ரூபாய் காசு : 48

## தரமான கலப்படமற்ற பூஜைப்பொட்களை மட்டும் வாங்குங்கள்



## திருஷ்டி பரிகாரம்

✱ திருஷ்டி பரிகாரம் சுற்றி உடைக்க கட்டிடம் கட்டிய தொழிலாளி குளித்து திருநீறு பூசியவர் தேவை
✱ பாதசாரி, வாகன ஓட்டிகளின் பாதுகாப்பு முன்னிட்டு பூசணியை நடுச்சாலையில் உடைக்க வேண்டாம்.

## பாதபூஜை



✱ தாய், தகப்பனார் இருப்பின் அவர்களுக்கு பாதபஜை செய்து பின்னர் பூஜை துவக்குவது நன்று

## தண்ணீர்

✱ மின் தடையை முன்னிட்டு முன்னாள் இரவே தொட்டியில் போதுமான அளவு நீரை சேமிக்கவும்
✱ மேல்நிலை தொட்டி நீர் குழாய் வால்வு எங்குள்ளது என் பதை முன் கூட்டி தெரிந்துக்கொள்ளவும்

## மங்கள இசை

✱ நாதஸ்வர மேளம் ஏற்பாடு அல்லது மங்கள இசை, தேவாரம், பக்திப்பாடல்கள் ஒலிவட்டு தேவை




## ஷாமியானா பந்தல் / மின்அலங்காரம், மின் விளக்கு

✱ வாசலில் வாழை மரம், முகப்பு பந்தல், தோரணம் (தேவைப்படின் ) ✱ ஜமகாளம் , சேர், மேஜை, ஷாமியானா பந்தல்,
✱ மின் அலங்காரம், மின் விளக்கு (குழந்தைகள் கைதொடாத வகையில், மின் அதிர்ச்சி ஏற்படாவண்ணம் பாதுகாப்புடன் )

## போக்குவரத்து

பொருட்களை கொண்டு செல்ல, விருந்தாளி அழைத்துவர போக்குவரத்துக்கு தேவைப்படின் கார், வேன் ஏற்பாடு செய்யலாம்

## எச்சரிக்கை

முடிவடையாத பாதுகாப்பற்ற ஆபத்தான கட்டுமான பகுதிகளுக்கு, கைப்பிடி சுவர் இல்லாத மாடிப்படிகளுக்கு தகுந்த தடுப்பு & பாதுகாப்பு ஏற்பாடு செய்யவும், எச்சரிக்கை பட்டையை கட்டவும், முதலுதவி பெட்டி தேவை.

தரையில் உள்ள தண்ணீர் தொட்டி, கழவுநீர் தொட்டிகளை பாதுகாப்பாக மூடவும்.


**குழந்தைகள் பாதுகாப்பாக இருக்க மிகவும் கவனத்துடன் தகுந்த ஏற்பாடுகள் செய்யவும்**

## தர்மம்

கிரஹப்பிரவேசம் அன்றய தினம் வேதபாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு வேளை உணவிற்கு ஏற்பாடு செய்யலாம், நல்ல நிலையில் மீதம் உள்ள உணவுகளை குறித்த நேரத்தில் ஆதரவற்றோர் இல்லங்களில் தானம் செய்யலாம்

**சிவாகம வேதபாட சாலை, முடிச்சூர் : 94443 12367**
**மடிப்பாக்கம் ருக்வேத பாடசாலை : 97908 36426**
**சங்கரமடம் வேதபாடசாலை, குரோம்பேட் 73581 52211,98840 59265**
**இரும்புலியூர் ருக்வேத பாடசாலை : 98404 49797**

## துணிகள் (துணிகளை துணிக்கடையில் மட்டும் வாங்கவும்)



✱ பூஜையின் பொழுது "பாதுகாப்பை முன்னிட்டு" பாலியஸ்டர், நைலான் துணிகளை உடுத்த வேண்டாம்.
✱ பாரம்பரிய, கலாசார ஆடை உடுத்தவும். பருத்தியில் நெய்த துணிகள் மட்டும் வாங்கவும்

**"கைத்தறி கதர் துணி வாங்கி ஏழை நெசவாளியின் ஒரு நாள் உணவிற்கு வழி செய்வோம்" - மகாத்மா காந்தி**



## புகைப்படக்கலை:

✱ பசுமையான நினைவுகள் நல்ல முறையில் பதிவு செய்ய தொழில்முறை புகைப்படக்கலைஞரை ஏற்பாடு செய்யவும். வீட்டில் உள்ளவர்களே படம் எடுப்பது முழுமையாகவும், தரமாகவும் அமைவதில்லை இதனால் நிகழ்ச்சியில் கவனம் செலுத்துவது மற்றும் வருகைதந்த விருந்தினர்களை உபசரிக்க இயலாது

**பெயர் - நட்சத்திரம்:** தங்களின் குலதெய்வம், கோத்திரம், குடும்ப அங்கத்தினர்கள் பெயர், நட்சத்திரம், ராசி, கோத்திரம் ஆகியவற்றை வயது மூப்பு அடிப்படையில் வரிசைப்படுத்தி எழுதி பூஜை துவங்கும் முன்னர் புரோகிதர் வசம் தரவும்

## குறிப்புகள்

✱ புத்துணர்ச்சிக்காக அதிகாலையில் காபி அல்லது டீ ஏற்பாடு
✱ கடைசி நேரத்தில் கிடைக்காத பொருட்களுக்காக அலைச்சல் படாமல் இருப்பதை கொண்டு மனநிறைவுடன் செய்வோம்
✱ பழங்கள் கெட்டுப்போகாமல் இருக்க பிளாஷ்டிக் பையில் வைக்கவேண்டாம். திறந்த நிலை அல்லது குளிர் பதனியில் வைக்கவும்

பூஜைக்கு பின்னர் அரிசி, தேங்காய் ஆகியன வேதபாட சாலைக்கு தங்கள் கரங்களால் தானம் செய்யப்படும்
நவக்கிரக துணி, பிள்ளையார் துண்டு ஆகியன தங்கள் மூலமாகவே கோவில் தெய்வங்களுக்கு சாற்றப்படும்

## கலசநீர் குளியல்

கிரஹப்பிரவேசத்திற்கு அடுத்த நாள் கும்ப கலசத்தில் உள்ள புனிதநீரால் தம்பதிகள் குளித்தல் நன்று

## ஹோம குண்டம் கலைத்தல்

பூஜை மறுநாள் அல்லது மூன்றாம் நாள் காலையில் சூரிய உதயத்திற்கு முன்னர் குளித்து சாமிபடத்திற்கு தீபாராதனை செய்து பின்னர் வடகிழக்கில் (ஈசான்ய மூலை) உள்ள செங்கலை கலைத்து பின் மற்ற செங்கல்களையும் அப்புறப்படுத்தவும்

சாம்பலை தனியாக எடுக்கவும், பழையதுணியை இரண்டாக மடித்து அதில் சாம்பலை கொட்டி மூட்டைக்கட்டி அதை ஒரு தட்டில் தட்டவும், தட்டில் விழும் நுண்ணிய சாம்பலை விபூதியாக பயண்படுத்தவும், மீதம் உள்ள சாம்பலை பூச்செடி அல்லது மரத்தின் அடியில் கொட்டவும். ஹோமத்தில் இட்ட சில்லரை காசுகளை பண அலமாரி , பூஜை அறையில் வைக்கவும்

## திருக்கோயில் வழிபாடு

கிரஹப்பிரவேசம் அன்று தலைவாசலில் இருபுறமும் விளக்கு ஏற்றவும், அருகில் உள்ள சிவன் அல்லது பெருமாள் கோயிலுக்கு சென்று குடும்பத்தினர் பெயரில் அர்ச்சனை செய்து வழிபடவும். வீடு திரும்பிய உடன் குடும்ப அங்கத்தினர் கூட்டாக அமரந்து பக்தி புத்தகத்தை படிக்கவும். தங்கள் பூர்வீக கிராமத்தில் உள்ள வசதியற்ற கோயிலுக்கு எண்ணெய் /ஒருமாத மின்கட்டணம் தந்து உதவிடுங்கள். ஆகமவிதிப்படி குளத்துடன் கூடிய பழமையான கோயிலுக்கே முன்னுரிமை தரவும்

---

### நிகழ்ச்சி நிரல்

1. கோ பூஜை
2. கணபதி ஹோமம்
3. கணபதி 108ஆவர்த்தி
4. வாஸ்து 11 ஆவர்த்தி
5. பஞ்சலோகபாலகர், அஷ்டதிக் பாலகர் ஹோமம்
6. லட்சுமி குபேர ஹோமம்
7. நவக்கிரக ஹோமம்
8. ஜென்ம நட்சத்திர சாந்தி ஹோமம்
9. சர்வ காயத்ரி ஹோமம்
10. குல தெய்வ தியான மந்திரம்,

**சிலநாட்களில் கிரஹப்பிரவேஸ செய்ய உகந்த (லக்ன) நேரம் சூரிய உதயத்திற்கு பின்னர் பகலிலும் ஏற்படும். எல்லாநாட்களிலும் அதிகாலையில் கிரஹப்பிரவேஸ லக்னம் இராது என்பதை கவனிக்கவும்.**

**குறிப்பு:** சரியான இலக்னத்தில் பால் காய்ச்ச வேண்டும் என்பதால் நேரம் இல்லாத நிலையில் ஆவர்த்திகள் எண்ணிக்கை குறையும், இது அப்பொழுதைய சூழல் பொருத்ததாகும். எனவே நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் துவக்குவது மிகவும் முக்கியமானது.

✱ இடத்தூய்மை, கோலம் இடல், தோரணம்-மாலை சாற்றல் ✱ கோபூஜை ஏற்பாடு ✱ கோவிலுக்கு சென்று வருதல்
✱ வரிசை தட்டு ஏற்பாடு ✱ மிக முக்கிய உறவினர் வருகை

ஆகியவையே நேரம் தாமதத்திற்கு மிக முக்கிய காரணங்களாக விளங்குகிறது என்பது எனது முந்திய அனுபவங்களில் கிடைத்த விடையாகும் என்பதை இங்கு குறிப்பிடுகிறேன் . முன்னாள் இரவில் பொம்மை எரித்தவுடன் வீட்டை கழுவி தூய்மைப்படுத்துவது கட்டிட தொழிலாளியின் பணியாகும். ஒருசிலர் சரிவர சுத்தம் செய்யாமல் உறங்கி விடுகிறார்கள். இதுவும் நிகழ்ச்சி தாமதத்திற்கு முக்கியமான காரணம் ஆகும் என்பதை கவனத்தில் கொள்ளவும்

---

### பால் பொங்குதல் - ஓர் விளக்கம்

**முறை 1:** கணபதி ஹோமத்தின் நிறைவில் அக்னி எடுத்து புதிய அடுப்பில் பால் காய்ச்சுதல், அடுத்து சர்கரை பொங்கல் செய்து சூரியனுக்கு படைத்தல். இந்த முறையில் ஹோமத்தில் அவல், அருகம் புல், கொப்பரை, தேங்காய்ஓடு, ஓம திரவியங்கள் மட்டும் அர்ப்பணிக்கப்படும்.

**முறை 2:** பிரவேசம் செய்தவுடன் சாமி படங்களக்கு தீபாராதனை செய்தவுடன் அந்த கற்பூர தீபத்தை வைத்து புது அடுப்பு மூட்டி பால் காய்ச்சி உடன் சர்க்கரை பொங்கல், சுண்டல் செய்து அதை கணபதி ஹோமத்தில் அர்பணித்தல்

**வேறு வீட்டில் இருந்து சமைத்து கொண்டு வரப்படும் சுண்டல், பொங்கல், கொழுகட்டை மற்றும் நெய்வேத்தியங்கள் ஆகியன கிரஹப்பிரவேச பூஜையில் & ஹோமத்தில் சாஸ்திரப்படி அர்பணிக்ககூடாது.** மேற்படி "முறை 2" படி கிரஹப்பிரவேச இல்லத்தில் குடும்ப அங்கத்தினரால் சமைக்கப்படும் நெய்வேத்தியங்கள் மட்டும் பூஜையில் அர்பணிக்கப்படும்.

---

## புரோகிதர் தட்சணை: ₹. 9000

**பட்டியலில் உள்ளபடி பொருட்களை வாங்குவது தங்களை சார்ந்தது**

**பட்டியலை அச்சு எடுத்து கடைக்கு சென்று பொருட்களை வாங்குங்கள்**
**கைபேசி (PDF) பயன் படுத்தி பொருட்களை வாங்குவதை கட்டயாம் தவிற்கவும்**

பாலு. சரவண சர்மா, புரோகிதர் - ஜோதிடர்,
எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர்,
தாம்பரம் மேற்கு, சென் னை 600 045

ૐ

கைத்தொலைபேசி : 98403 69677
மாற்று எண் 91691 69677
இணைய தளம்: www.prohithar.com

**கிரஹப்பிரவேசம் பொருள் பட்டியல்**

**இந்த பட்டியலை அச்சு எடுத்து பின் னர் கடைக்கு சென் று பொருட்களை வாங்கவும்**

**தரமான பூஜைப்பொருட்களை மட்டும் வாங்கவும்**

---

பூஜைப்பொருட்கள்

| | |
|---|---|
| தரமான மஞ்சள் தூள் | 100 கிராம் |
| தரமான குங்குமம் | 50 கிராம் |
| விரலி மஞ்சள் கொம்பு | 100 கிராம் |
| குண்டு மஞ்சள் கொம்பு | 100 கிராம் |
| வீபூதி பொட்டலம் | சிறியது 1 |
| நாமம் - சூரணம் | |
| பன் னீர் புட்டி | 100 மில்லி |
| தரமான சந்தனம் தூள் | 20 கிராம் |
| நவதான் யம் கலப்பு | 100 கிராம் |
| நவதான் யம் தலா | 25 கிராம் |
| தரமான கற்பூரம் | 25 கிராம் |
| வாசனை ஊதுபத்தி | |
| தரமான சாம்பிராணி | 25 கிராம் |
| நெல்பொரி | பொட்டலம் |
| ஒமத்திரவியம்(சிறியது) | பொட்டலம் |
| உமி | பொட்டலம் |
| திரிநூல் | 1 கட்டு |
| தேன் புட்டி | 10 கிராம் |
| பஞ்சு நூல்கண்டு பெரிது 3 | |
| (பாலியஸ்டர் நூல் தவிற்கவும்) | |
| பூநூல் | 2 |
| வெற்றிலை | 50 |
| களிப்பாக்கு | 50 கிராம் |
| கொட்டைபாக்கு | 9 |
| சுன் னாம்பு | |
| தீப்பெட்டி | 4 |
| தர்பை புல் பெரிய கட்டு | 4 |
| (தர்பையை மடக்க வேண்டாம்) | |
| வெல்லம் | 100 கிராம் |
| கற்கண்டு (டைமன் ட்) | 50 கிராம் |
| பாக்கு தொன் னை | 12 |
| சிறிய கத்தி | 1 |
| அவல், பொரி, கடலை | 100 கிராம் |
| நாட்டு சர்கரை | 100 கிராம் |
| கொப்பரை | 1 |
| முந்திரி, திராட்சை | 50 கிராம் |
| தீர்த்த பொடி | 10 கிராம் |
| திருஷ்டி படிகாரம் - கம்பளிகயிறு | |
| நெல் | 1 கிலோ |
| **மிக தரமான நெய்** | **250 கிராம்** |
| **நல்லெண்ணெய்** | **50 மிலி** |
| அரசன் சுள்ளி | 4 கட்டு |
| காகித கோப்பை (பேப்பர் டீ கப்) 50 | |
| தூய்மை தாள்(டிஷ்யூ பேப்பர்) 1 கட்டு | |
| மண் அகல் | 4 |

**➔தேவைப்படின் மட்டும் வாங்கவும்**

➔கோலமாவு 50 கிராம்
➔வண்ணக்கோல மாவு , ➔காவி
➔கரும்பலகை எழுதி (சாக்பீஸ்)

| | |
|---|---|
| பசும்பால் | 1 லிட்டர் |
| தயிர் | 50 மில்லி |
| கோதுமை தவிடு | 4 கிலோ |
| வெல்லம் | 250 கிராம் |

**இதரபொருட்கள்**

| | |
|---|---|
| இதயம் நல்லெண்ணைய் | 500 மிலி |
| வாழை இலை | 11 |
| வாழைப்பழம் | 24 |
| கல்யான பூசனி | 1 |
| எலுமிச்சை | 12 |
| பழங்கள் தலா 2 | 5 வகை |
| மட்டை தேங்காய் | 2 |
| உரித்த சிறிய தேங்காய் | 13 |
| பச்சரிசி | 5 கிலோ |
| புழுங்கல் அரிசி | 1 கிலோ |

**பூவகைகள்**

| | |
|---|---|
| பூமாலை (தம்பதி) | 2 |
| வாசல் மாலை | 1 |
| கதம்பம் பூச்சரம் (பூஜைக்கு) | 15 அடி |
| உதிரிப்பூக்கள் | 1 கிலோ |

அருகன் , துளசி, வில்வம், தாமரை

**துணிகள் (துணிக்கடையில் வாங்கவும்)**
**(கண்டிப்பாக பருத்தி துணிகள் மட்டும் வாங்கவும், பாலியஸ்டர் தவிற்கவும்)**

பிள்ளையார் துண்டு (40 - 60) 4
பெரிய காசி துண்டு 1
**பருத்தி** நவக்கிரக துணி
மஞ்சள் **பருத்தி** ரவிக்கை துணி 1
**பருத்தி** 4 முழும் வேஷ்டி - துண்டு 1

| | |
|---|---|
| புதிய பித்தளை பெரிய சொம்பு | 2 |
| சிறிய பித்தளை கலச சொம்பு | 9 |

*(தேங்காய் நிற்கும் அளவிற்கு ஏற்ப)*

**விநாயகர் சரஸ்வதி லக்ஷ்மி**
**முருகர் பெருமாள் படம்**

---

| | |
|---|---|
| வெள்ளி காசு 5கிராம் | 2 |
| ஐந்து ருபாய் நாணயம் | 21 |
| ஒரு ரூபாய் நாணயம் | 48 |

**வீட்டில் இருந்து தவறாமல் கவனத்துடன் கொண்டு வரவும்**

குத்து விளக்கு 2, காமாட்சி விளக்கு
பழைய மண்அகல் 4,

பன் னீர் சொம்பு, சந்தன கிண்ணம், ரோஜா குங்குமசிமிழ், தட்டு, கற்கண்டு, மேஜை விரிப்பு

**பூஜை சாமான் கள்** : மணி, தட்டு, பஞ்சபாத்திரம், உத்தரணி, தீபகலசம் நெல் படி அளவை

தாம்பாள தட்டு 5, சிறிய கிண்ணம் 5
பேசின் 2, நெருப்பு எடுக்க இடுக்கி,
நீர்கொண்டு வர சிறிய குடம்

மரமணை+மணைமேல் துணி
எண்ணை புட்டி + நல்லெண்ணைய்

பழைய செய்தித்தாள், கைதுடைக்க துணி
கோணி 4 (பசுமாடு உள்ளே அழைத்து வர)
பழைய டர்கி டவல் பெரியது2

கத்திரிக்கோல், தேங்காய் உடைக்க கத்தி,
கத்தி, புதிய பக்கெட் 2, ஐக்கு 2

பால் பாத்திரம்+கரண்டி+சர்க்கரை
விறகு சுள்ளி 5 கிலோ, சர்க்கரை பொங்கல் பொருட்கள்

பருப்பு4 வகை, உப்பு, மிளகாய், வெல்லம்,
தவிடு (பூஜை அறையில் வைக்க)

செங்கல் 21(கழுவியது) மணல் 1 பாண்டு
**▣ மாவிலை (கழுவியது)21 கொத்து**

மங்கள இசை *கோலமாவு*

**புத்தகங்கள்: (தவறாமல் கொண்டு வரவும்)**
**தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திருக்குறள், இராமாயணம், மகாபாரதம், பகவத்கீதை, சிவபுராணம், திவ்யபிரபந்தம், கந்தசஷ்டிகவசம்,**

வாசலில் மாலை தொங்கவிட
ஆணிகள்4, சுத்தியல்

பசுவிற்கு தீவனம் தர அன் னக்கூடை / TUB
**குப்பை போட பை, துடைப்பம்**

**கடைக்கு செல்லும்பொழுது**
**பெரிய பை கொண்டு செல்லவும்**



**கண்டிப்பாக மின் விசிறி**
(Table Fan & Extension Wire Box) **கொண்டுவரவும்**
**புகை வெளியேற்ற தேவை**